# தமிழ் முரசு

TAMIL MURASU — A Singapore Press Holdings Publication — தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ சாரங்கபாணி — MITA(P) 230/08/2000

50 காசு — VOICE OF THE COMMUNITY — சனி 28 4 2001



முத்தையா உணவகம்
சைவமா - அசைவமா?
பலகாரமா - சாப்பாடா?
சடச்சுடவும் கிடைக்கும்
கேழ்வரகு இடியப்பம்
இப்போது கிடைக்கும்
முத்தையா உணவகம்
7, வீராசாமி ரோடு, சிங்கப்பூர்
தொலைபேசி: 2911485
(ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில் எதிரில்)



தொடக்க நிலை 6 தமிழ்ப் பாடம்

பக்கம் 3





பிரதமருக்கு உயரிய மே தின விருது

பக்கம் 2



தூன் செங் யாவ் சியூ
春生葯酒
உடம்பு வலியா?
இடுப்பு வலியா?
முதுகு வலியா?
மூட்டு வலியா?


## கோலாலம்பூர் புத்ரா உலக வர்த்தக மையத்தில் ஆகஸ்ட் 26-28

# தமிழ் இணைய மாநாடு 2001



சிங்கப்பூர் தமிழர்கள் பெற்றிருக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவை மலேசியத் தமிழர்களுடன் பகிர்ந்துகொள்வதோடு மாநாட்டில் கூடும் உலகத் தமிழர்களிடமும் தகவல்தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்துகொள்ளலாம். பல அரிய பெரிய கண்டு பிடிப்புகளையும் புதிய தொழில்நுட்ப உத்திகளையும் அறிந்துகொள்ள இம்மாநாடு பெரிதும் உதவும்.

இம்மாநாடு, அண்டை நாடான மலேசியாவில் நடப்பது நமக்கெல்லாம் ஒரு நல்ல வாய்ப்பு. இதை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இங்கிருந்து செல்லும் வருகையாளர்கள் இணைந்து செல்வதற்கான பயண ஏற்பாடுகள் குறித்து எங்கள் குழு சிந்தித்துக்கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் அது பற்றிய அறிவிப்பையும் “சிங்கப்பூர் தமிழ் இணைய ஒருங்கிணைப்புக் குழு” சார்பிலும் “உத்தமம்” அமைப்பு சார்பிலும் வெளியிடவுள்ளோம்.

- நாரா ஆண்டியப்பன்
நிர்வாக அதிகாரி,
சிங்கப்பூர் தமிழ் இணைய ஒருங்கிணைப்புக்குழு
மற்றும்
“உத்தமம்” அமைப்பு

“இணையம்” என்ற பெயர் இன்டர்நெட் என்னும் ஆங்கிலச்சொல்லுக்கு நேரடியான மொழிபெயர்ப்பு அல்ல. நாமெல்லாம் ஒரு காலத்தில் ஒன்றாக இணைந்து சாதிக்கப்போகிறோம் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்ததால் இந்தப் பெயர் இணையத்திற்கு இடப்பட்டிருக்கலாம். இந்த இணையம் என்ற பெயர் மலேசிய, சிங்கப்பூரில் உருவான பெயர் என்பதில் பெருமைகொள்வோம். ஆண்டொருமுறை மாநாடு கண்டு ஒன்றுகூடி தகவல்தொழில்நுட்பப் பரிமாற்றத்தில் களிப்போம். ஆகஸ்ட் 26 முதல் ஆகஸ்ட் 28ம் தேதி வரை கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் மாபெரும் தமிழ் இணைய மாநாட்டுக்கு வாருங்கள் இணைவோம் இணைய மாநாடு 2001ல். இம்மாநாட்டில் வர்த்தகரும் வாடிக்கையாளரும் குழந்தையும் பெற்றோரும் ஆசிரியரும் மாணவரும் ஒன்றிணைந்து தகவல் தொழில்நுட்ப மொழியில் உரையாடி முன்னேற்றத்திற்கான முன்னோடிகளை அடையாளம் கண்டு மகிழ்வோம்.

- முத்து நெடுமாறன்
தலைவர், இணைய மாநாடு 2001




**அண்.சிவ. குணாளன்**
**kunalan@asia1.com**


தமிழ் இணைய மாநாடு 2001, கோலாலம்பூரில் ஆகஸ்ட் மாதம் 26 முதல் 28-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இது 4வது தமிழ் இணைய மாநாடு ஆகும். இதற்கு முந்தைய மாநாடான தமிழ் இன்டர்நெட் 2000 சிங்கப்பூரில் சென்றாண்டு ஜூலை மாதம் 22 முதல் 24-ம் தேதி வரை நடைபெற்றது.

1997ம் ஆண்டு சிங்கப்பூரில் தொடக்கம் கண்ட இந்த மாநாட்டின் 4-வது தமிழ் இணைய மாநாட்டின் தொடரே “தமிழ் இணைய மாநாடு 2001”.

இந்த ஆண்டுக்கான இம்மாநாடு கோலாலம்பூரில் புத்ரா உலக வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் இச்செய்தியை “உத்தமம்” என்றழைக்கப்படும் தமிழ் தகவல்தொழில்நுட்ப மன்றத்தின் தலைவர்களான முனைவர் அனந்தகிருஷ்ணன், திரு முத்து நெடுமாறன் ஆகியோருடன் இணைந்து கூட்டாக மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அறிவித்துள்ளார்.

நேற்று, சிங்கப்பூரில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில், உத்தமம் அமைப்பின் இணைத் தலைவரும், கோலாலம்பூரில் நடைபெறும் இம்மாநாட்டின் தலைவருமான திரு முத்துநெடுமாறன், சிங்கப்பூர் தமிழ் இணைய ஒருங்கிணைப்புக் குழு மற்றும் உத்தம் அமைப்பின் நிர்வாக அதிகாரியுமான திரு நாரா ஆண்டியப்பன், மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் திரு ராஜ்குமார் ஆகியோருடன் இதனை அறிவித்தார்.

இம்மாநாட்டில் ஐம்பதுக்கு மேலான அனைத்துலக தொழில்நுட்ப வல்லுநர்களும் தமிழ் ஆய்வாளர்களும் ஆய்வுக் கட்டுரைகளைப் படைப்பர் என அறிவிக்கப்பட்டது.

தமிழ் இணைய மாநாடு 2001க்கான ஆய்வுக்கட்டுரைகளை அனுப்புவது பற்றிய அறிவிப்பு இந்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து சிங்கப்பூர் உட்பட உலகின் பல நாடுகளில் இருந்து பல ஆய்வுக்கட்டுரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் அரிய ஆய்வுக்கட்டுரைகளைப் பெறும் நோக்கத்தில் கட்டுரை சமர்ப்பிக்கும் இறுதி நாள் மே மாதம் 20ம் தேதிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும் செய்தியாளர் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

தமிழ் இணைய உலகில், வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த “தமிழ் இணைய மாநாடு 2001” இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அனைத்துலக மாநாட்டையொட்டி காட்சியையொட்டி “டுனியா வெப்20001” என்னும் கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது. இக்காட்சியில் சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் உருவாக்கம்பெற்ற தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் பற்றியும் மேலை நாடுகளில் உருவாக்கப்பட்ட சாதனங்கள் பற்றிய விளக்கக் காட்சிகளும் இடம் பெறும்.

சென்றாண்டு 35,000 வருகையாளர்களை ஈர்த்த தமிழ் இணைய மாநாடு இந்த ஆண்டு 50,000க்கும் மேற்பட்ட உலகம் தழுவிய வருகையாளர்களை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகம் முழுவதிலும் 80 மில்லியன் தமிழர்களைக் கொண்டது தமிழ் உலகம். ஆயிரக்கணக்கான இணையப் பக்கங்கள் தமிழைத் தாங்கி வருகின்றன.

அதோடு உலகம், தகவல் தொழில்நுட்பத்தில் மேம்பாடு காணுவதற்கு பெருமளவில் பங்காற்றி வருபவர் தமிழ் உலகத்தைச் சார்ந்தவரே என்பதில் நாம் பெருமை கொள்ளவேண்டும்.

தனி ஒரு நாட்டில் மட்டும் அல்லாது உலகம் தழுவிய நிலையிலும் தமிழர்கள் கணினித் துறைக்குப் பெரும்பாங்காற்றுவதன் வழி உலகத்தின் பொருளியல் ஏற்றத்திற்கு வழிவகுக்கின்றனர். இருந்தும் மூலை முடுக்குகளில் வெளிப்படும் நல்ல உருவாக்கங்கள் ஊருக்கு வெளியே செல்லும் வாய்ப்பின்றி ஓரிடத்திலேயே முடங்கி ஒய்ந்து ஒளிந்துகொள்ளாமல் ஒளிரச் செய்வதற்கு இந்த ஒவ்வொரு தமிழ் இணைய மாநாடும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகஸ்ட் மாதம் 26ம் தேதி முதல் 28ம் தேதி வரை கோலாலம் பூரில் நடைபெறவிருக்கும் இந்த தமிழ் இணைய மாநாட்டில் உலகம் முழுவதிலும் இருந்து கணினி வல்லுநர்கள் எதிர்பார்க்கப் படுகிறார்கள்.

சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு 2000ல் உறுதிசெய்யப்பட்ட குறிக்கோள்களையும் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும் தொழில்நுட்பரீதியில் தமிழும் தமிழ் மக்களும் எவ்வழியில் முடக்கப்பட்டுள்ளோம் என்பதையும் ஆய்ந்து அதற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்ற ஆலோசனைகளும் விவாதங்களும் இம்மாநாட்டில் இடம்பெறும். தொழில்நுட்பம் மட்டுமின்றி தமிழ் மொழி ஒருங்கிணைப்புப் பற்றியும் கலைச்சொல் ஒருங்கிணைப்புப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் விவாதங்களும் பரிந்துரைகளும் இம்மாநாட்டில் நடைபெறும்.

புதிய அறிமுகங்களுடன் புதிய அனுபவத்தையும் புதிய அறிவுத் திறனையும் பெற்று புதிய தகவல் தொழில்நுட்பப் பாதைக்கு நம்மை இம்மாநாடு இட்டுச்செல்லும் என்று நம்பிக்கைகொள்வோம்.

சிங்கப்பூர் தமிழ் இணைய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைமையில் சிங்கப்பூர் பேராளர்களும் பங்கேற்பாளர்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்வர்.

இம்மாநாடு பற்றிய மேல் விவரங்கள் http://www.tamilinternet2001.org என்ற இணையப்பக்கத்தில் கிடைக்கும். தொலைபேசித் தொடர்புக்கு திரு செல்வகுமாரை 012-3330606 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## எஸ்ட்ரடாவை வேறு சிறைக்கு மாற்ற சிறப்பு நீதிமன்றம் அனுமதி

**மணிலா**

சிறையிலடைக்கப்பட்டுள்ள பிலிப்பீன்சின் முன்னாள் அதிபர் எஸ்ட்ரடாவை பாதுகாப்பான மற்றொரு சிறைச்சாலைக்கு மாற்ற சிறப்பு நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

எஸ்ட்ரடாவின் ஆதரவாளர்கள் தற்போது அவர் சிறை வைக்கப்பட்டுள்ள இடத்தைத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தை சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து இந்த ஆணையை நீதிபதி பிறப்பித்தார்.

தேவையேற்பட்டால் முன்னாள் அதிபரை புதிய இடத்திற்கு மாற்ற அனுமதி வழங்கிய நீதிபதி, அவ்வாறு செய்யும்போது நீதிமன்றத்திற்கும் எஸ்ட்ரடாவின் வழக்கறிஞர்களுக்கும் அரசுக்கும் ஒரு மணி நேரம் முன்னதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

தற்போது மணிலா நகரில் உள்ள சிறையில் மேலும் 55 கைதிகளுடன் காவலில் வைக்கப்பட்டுள்ள எஸ்ட்ரடாவை விடுவிக்க அவரது ஆதரவாளர்கள் முயற்சி மேற்கொண்டால், அந்த இடத்தில் ஒரு போர்க்களமே உருவாக வாய்ப்புள்ளது என்று பிலிப்பீன்ஸ் போலிஸ் தலைமை அதிகாரி மெண்டோசா நீதிமன்றத்தில் தெரிவித்தார். அந்த சிறைச்சாலைக்கு அருகேயுள்ள ஒரு தேவாலயத்தினருகே சுமார் 50,000 பேர் கூடியுள்ளனர் என்றும் அவர்களால் கலவரம் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த இடத்தில் கலவரம் ஏற்பட்டால் சிறைச்சாலை தவிர அந்தப் பகுதியில் உள்ள பல நிறுவனங்களும் அழிந்து போகும் என்று அவர் எச்சரித்தார்.

ஏஎப்பி

## ஜப்பான் பிரதமருக்கு கோ வாழ்த்து

ஜப்பானின் பிரதமராக பதவியேற்றுள்ள கொய்சுமிக்கு வாழ்த்துத் தெரிவித்து சிங்கப்பூர் பிரதமர் கோ சோக் டோங் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜப்பான் பல சவால்களை எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில் நீங்கள் பிரதமராகப் பதவியேற்றுள்ளீர்கள். முக்கிய சவாலான பொருளியல் பிரச்னைகளை நீங்கள் உங்களது சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் சரிசெய்து ஜப்பானை ஒரு வலுவான நாடாக மீண்டும் உருவாக்க நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என்று அந்தச் செய்தியில் பிரதமர் கோ தெரிவித்துள்ளார். ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளுக்கிடையே நிலவி வரும் இரு தரப்பு உறவுகள் மேலும் வலுவடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியில் இருந்து விலகியுள்ள மோரிக்கும் கோ செய்தி பிரிவு உபசார செய்தியொன்றை அனுப்பியுள்ளார் என்று சிங்கப்பூர் வெளியுறவுத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.





வாசக அன்பர்களே!
மொழிவளப் பக்கத்தை வாரந்தோறும் படித்து ரசித்து மகிழும் உங்களுக்கு ஒவ்வொரு வாரமும் புதிர்ப்போட்டிகளுக்கு 200 வெள்ளியைப் பரிசாக வழங்கவிருக்கிறோம்.
கல்வியும் செல்வமும் ஒருசேரப் பெற
மொழிவளம்
வாரந்தோறும் $200 பரிசு